வள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

குதி : 103 பகுதி : 1 | சனவரி - 09 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# பிறை

நஞ்சையிலே நெல்லறுப்போர் அரிவாள் என்பார்!
நம்கணக்கர் மூன்றின்கீழ் பாதி என்பார்!
கொஞ்சுகின்றசிறுபிள்ளை கொடுக்காய் என்பார்!
கோழிகண்டோர் சேவல்வால் இறகே என்பார்!
விஞ்சுகவி விரைந்தெழுதும் பகரம் என்பார்!
வீரர்கள் நாணில்லா வில்லே என்பார்!
மஞ்சடுத்த பிறையின்பல் உவமை போல
மண்ணில்நாம் வளைந்தினிதாய் பணிந்து வாழ்வோம்!
நாரெடுப்போர் மாலையிலே பாதி என்பார்!
நன்மூட்டைத் தூக்குவவோர்கைக் கொக்கி என்பார்!
நீரெடுப்போர் வாளியின்கைப் பிடியே என்பார்!
நியைவுள்ளோர் ஓரடைப்புக் குறியே என்பார்!
ஏரெடுப்போர் மாட்டிலொரு கொம்பே என்பார்!
இயற்கவிஞர் பாரதியின் மீசை என்பார்!
காரடுத்த பிறையின்பல் உவமை போல
காசினியில் வளைந்தினிதாய் பணிந்து வாழ்வோம்!

**க.தண்டபாணி,**
**வீரசோழபுரம்.**

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 103
பகுதி : 1
*சனவரி* 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2039




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


இதழ்மணம் 3

நூல் மதிப்புரை — திரு இரா.அழகுமலை 4

தமிழ் : செம்மொழிச் செயலாக்கத்திற்குச் செய்ய வேண்டுவன (சென்றஇதழ்த் தொடர்ச்சி) — திரு தி.இராசகோபாலன் 5

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தோற்றமும் ஏற்றமும் — பெரும்புலவர் தமிழ்ச்சங்கச் செம்மல் இரா.இளங்குமரன் 9

சித்தர் பாடல்கள் : ஆண் கதையாடலில் "பெண்உடல்" — முனைவர் தே.ஞானசேகரன் 13

குலசேகர ஆழ்வார் பாடல்களில் அகமரபுக் கூறுகள் — பேரா முனைவர் கடமுத்தன் 22

பைந்தமிழ் காத்த பாண்டித்துரைத்தேவர் — புலவர் முத்துவெங்கடேசன் 30

சங்க இலக்கியத் துறைகள் பயிலரங்கு 36

வாசகர் வாசகம் 39

# இதழ்மணம்

உலகின் வளமை அனைத்தும் வாசகர்கள் வாழ்வில் அமைய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

என்றும் நிலைத்திருக்கும் வள்ளுவத்தின் கருத்தாக்கங்களை இனிய எளிய மொழியில் படைத்துள்ள தனித்திரு நானூறு என்னும் குறள் வெண்பா நூலுக்கு மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு. இரா.அழகுமலை எம்.ஏ.,எம்.பில்., அவர்கள் மதிப்புரை நல்கி செந்தமிழின் இதழைச் சிறக்கச் செய்துள்ளார்.

செம்மொழித் தமிழ் சிறப்பாக நிலைபெற செய்யத் தகுந்த செயல்களை, 45 அரிய கருத்து மணிகளை இரு இதழ்களிலும் தொடர்ந்து சிறப்பாக வழங்கியுள்ளார் திரு.தி.இராசகோபாலன் அவர்கள்.

நீண்ட நெடுங்காலமாக நம் செந்தமிழ் இதழோடு இணைந்திருக்கும் பெரும்புலவர், தமிழ்ச்சங்கச் செம்மல் இரா.இளங்குமரன் அவர்கள் பொருத்தமுற நம் 'மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தோற்றமும் ஏற்றமும்' என்னும் கட்டுரையை இனிதாக வழங்கியுள்ளார்.

பெண்ணின் மீது சமூகம் கொண்டுள்ள கருத்தை, "சித்தர் பாடல்கள்: ஆண் கதையாடலில் பெண் உடல்" என்னும் கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

அகமரபுக்கூறுகள் குலசேகர ஆழ்வார் பாடல்களில் அடித்தளமாக உள்ளதை முனைவர் கூ.முத்தன் வெளிக்காட்டியுள்ளார்.

நம் நிறுவனர் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்கள், பைந்தமிழ் காத்த திறத்தைப் புலவர் முத்து வெங்கடேசன் சிறப்புற வெளிக்காட்டியுள்ளார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையின் உதவியோடு, செந்தமிழ்க் கல்லூரியில் நடைபெற்ற சங்க இலக்கியத் துறைகள் பற்றிய பயிலரங்கின் சிறப்புக்கூறுகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

செந்தமிழ் இலக்கியத்தை நுகரும் தமிழ் அறிஞர்களின் கருத்துக்களுக்கு (வாசகர் வாசகம்) வரவேற்பும் வணக்கமும்.

*முனைவர் க. சின்னப்பா*

## நூல் மதிப்புரை

**திரு. இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.பில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

நூல் : தனித்திரு நானூறு – முதல்தொகுதி 1–133
ஆசிரியர் : *பால. வேங்கடராமன்*
பதிப்பு : முதற்பதிப்பு – நவம்பர் 2008
அச்சகம் : அகத்தியர் அச்சகம், இராசய்யர் தோட்டம்.
விலை : ரூ.20/–

சாதி, மதம், கட்சி, மொழி, இனம், நாடு ஆகிய அனைத்தும் கடந்து, மனித இனப்பொற்காலம் காண, ஒன்றே உலகு என்னும் உணர்வு உலகோர் உள்ளங்களில் உண்மையாக ஒளிவிட, அன்பும் அமைதியும் நிறைந்த புதியதோர் உலகம் படைத்திட வழிகாட்டும் உயர்நெறிகள் சிலவற்றுள் முதன்மையானவை இரண்டு. ஒன்று பொதுவுடைமை; மற்றொன்று வள்ளுவம்.

புனைவுகளால் பின்னப்பட்டு, வேடமிட்டு வரும் நூல்களின் நடுவில் தனித்து நின்று குறள் வெண்பாவிற்குள் ஆட்சி செய்யும் பால.வேங்கடராமனுக்கு அலங்காரமில்லா வாழ்த்துக்கள்.

**"ஏழைக்கு உணவு; குழந்தைக்குத் தாய்; விவசாயிக்கு மழை
பால.வேங்கடராமனுக்கோ தனித்திரு நானூறு."**

வெண்பாவிற்குள் தெரிவது குறள் மட்டுமல்ல; குடும்பம், தெய்வநெறி, நீதி, மனநிலை, ஆசையின்மை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு தனித்து நிற்கின்றது தனித்திரு நானூறு. தூசியாய், துகளாய், துணுக்குகளாய் படிந்து கிடக்கும் மண்ணின் மீது மழைத்துளியானது விழுந்தவுடன் மண் அடையும் சிறப்பினைப்போல இவ்வுலகில்,

**"பெண்ணுடன் வாழ்தலே வீடு"**

என உவமை நயத்தையும் சேர்த்து அணி செய்கிறார்.

வள்ளுவனின் மீதும் குறளின் மீதும் பற்றுக் கொண்ட குறளாளர், வேற்றுமையினையும் பதிவு செய்கிறார்.

**"தீப்பட்ட புண்போலத் தீச்சொல் விடுப்பட
நாப்பட்டப் பேசாமை நன்று"**

நெருப்புச் சுட்ட புண் மருத்துவத்தினால் எளிதாய் ஆறிவிடும். ஆனால் வெறுப்பு கொண்டு திட்டிய சொற்களால் விளைந்த துன்பம் ஆறவே ஆறாது. ஆகவே அந்த வார்த்தையைப் பேசாமல் இருப்பதே சிறந்தது என்கிறார்.

குறள்களின் மூலம் அணிநயங்களைக் கூறியவர்,

"ஆலம் விழுதுகள் போல – உறவு
ஆயிரம் வந்துமென்ன"

எனக் கண்ணதாசனை முன் வைத்து வெண்பா படைத்துள்ளார்.

"ஆலம் விழுதாய் உறவுகள் – ஆமெனின்
ஞாலம் முழுதும் நலன்"

உறவுகள் நீண்டால், தொடர்ந்தால் மட்டுமே நன்மை என்கிறார்.

"தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்
தரத்திலே குறைவதுண்டோ"

"சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும்
சீற்றம் குறைவதுண்டோ"

என்ற கண்ணதாசனின் நீண்ட கவிதை வரிகளை நன்னூலார் கருத்துப்போல சுருங்கக் கூறுகின்றார்.

"சிங்கம் இளைத்தாலும் சீற்றம் குறையாது
தங்கம் கெடுமோ தரம்"

என்று பல்வேறு தளங்களில் வெண்பா படைத்துள்ளமை பன்முகப் பார்வையாளர் என்பதற்குச் சான்றளிக்கின்றது.

"தனித்திரு நானூறு" பால.வேங்கடராமன் அவர்களின் கைவண்ணத்தை – சொல் வண்ணத்தை வெளிப்படுத்தும் உயிரோவியம்.

குறளின் அருமையை, பெருமையை எளிய முறையில் அனைவருக்கும் அறிவுறுத்தும் நோக்கில் எழுந்த தமிழோவியம்!

தமிழ் நெஞ்சத்தின் மன ஓவியம் இந்தத் தனித்திரு நானூறு படைத்தோனுக்குத் தமிழ்க்கரம் குவிப்பது

இரா. அழகுமலை, செயலாளர்

# தமிழ் : செம்மொழிச் செயலாக்கத்திற்குச் செய்ய வேண்டுவன

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

*திரு.தீ.இராசகோபாலன்*

32. ஒரு படைப்பிலக்கியத்தின் தராதரத்தை எடுத்துச் சொல்பவன், திறனாய்வாளனே! "பாஸ்வல் இல்லாவிட்டால் ஆங்கில அகராதியைத் தொகுத்த டாக்டர் ஜான்சன் இல்லை" என்பார்கள். அதுபோலவே A.C.பிராட்லி இல்லாவிட்டால், சேக்ஸ்பியரின் முழுமையும் பெருமையும் வெளிப்பட்டிருக்காது. மேலும் ஒரு நல்ல திறனாய்வு நூல், பிற்காலத்தில் ஒரு படைப்பிலக்கியமாகவே மலர்வதற்கு வாய்ப்புண்டு. இறையனார் களவியல் உரை, மூலத்தைக் காட்டிலும் சிறப்புப் பெற்றிருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். எனவே திறனாய்வுத் துறையையும் போற்றி வளர்க்க வேண்டும்.

33. தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழாய்வின் தரம், உலகத் தரத்தளவிற்கு (World Class) இன்னும் உயரவில்லை. இங்கு ஆய்வேடுகள், கொடுக்கப்படுபவனவாகவும், வாங்கப்படுவனவாகவும் இருக்கின்றனவே தவிர, யாரும் எடுத்துப் படிக்கும் படியாக இல்லை.

34. தவத்திரு தனிநாயக அடிகளார், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி போன்றோர்களுடைய தரத்தை இன்னும் ஆய்வேடுகள் எட்டிப்பிடிக்கவில்லை. ஆய்வு என்பது ஒரு பசி; தேடல்; ஒரு தவம். ஆனால், இப்பொழுது அது ஒரு தேர்வு என்றாகிவிட்டது. ஆய்வு, தேர்வு என்றான் பிறகு 40 மதிப்பெண்கள் பெற்றவர்கள் யாராக இருந்தாலும் தேர்ச்சி கொடுத்துத் தானே ஆக வேண்டும். ஆய்வாளரைப் போலவே நெறியாளரும் மும்மடங்கு படிக்க வேண்டும். ஆய்வாளனுக்கும் சேர்த்து நெறியாளர் படிக்க வேண்டும். அப்பொழுதுதான், தமிழில் ஆய்வு, எண்ணிக்கையில் உயர்வதற்குப் பதிலாக எண்ணங்களில் உயரும்.

35. தமிழ் இலக்கணத்தில் பழையன கழிதலுக்கும் புதியன புகுதலுக்கும் இலக்கணம் இருக்கின்றது. பழையன காய்ந்த தென்னை மட்டைகளைப் போல தாமே உதிர்ந்து விடுகின்றன. ஆனால், புதியன புகவில்லையே! புதுக்கவிதை, வசன கதைகள் வெள்ளம்போல் பெருக்கெடுத்து வருகின்றனவே. அத்தகைய இலக்கியத்திற்கு, இலக்கணம் இயம்ப அமிதசாகரர்களும் தொல்காப்பியர்களும் ஏன் முயலவில்லை?

36. உரைநடையில் இருப்பியல், அமைப்பியல், பின் நவீனத்துவம், பெண்ணியம், இதழியல் போன்ற துறைகள் வளர்ந்து விட்டனவே. இவைகளுக்கு எல்லாம் கட்டமைப்புக்களை வரையறுக்க வேண்டாமா? ஏட்டுச்சுரைக்காயாக இருக்கும் செம்மொழியைக் கறிச் சுரைக்காயாக ஆக்க வேண்டும்!

37. செம்மொழி ஆக்குவதற்காக ஏறத்தாழ அனைத்து அரசியல் கட்சிகளும் பாடுபட்டிருக்கின்றன. பிறந்திருக்கும் செம்மொழியான குழந்தைக்கு யாருடைய தலையெழுத்தை (இனிசியல்) வைப்பது? என்பதற்காகச் சுவரொட்டிகள் ஒட்டுவதற்குப் பதிலாக, 'அக்குழந்தைக்கு எத்தகைய ஊட்டச்சத்துக்கள் ஊட்ட வேண்டும், எப்படித் திடகாத்திரமாக வளர்க்க வேண்டும்' என முயன்றால் தாயும், சேயும் நலம் பெறுவார்கள்.

38. தமிழ், செம்மொழி என்றால், 'அது ஏதோ தமிழாசிரியர்களோடு மட்டுந்தான் சம்பந்தமுடையது' என்ற எண்ணம் பல்கலைக்கழக வட்டாரத்தில் பலருக்கும் இருக்கின்றது. பிறதுறைப் பேராசிரியர்கள், இந்த மாயையிலிருந்து விடுபட வேண்டும். தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் செம்மொழியோடு பந்தமும் உண்டு; சம்பந்தமுமுண்டு.

39. "பிறநாட்டு சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்", என எட்டையபுரத்துக்கவிஞன் பாடியதற்கிணங்க, பிறமொழிகளில் காணப்படும் அறிவுக் கருவூலங்களைப் பிறதுறைப் பேராசிரியர்கள் தமிழாக்கம் செய்ய வேண்டும்.

40. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்றும் அந்த மகாகவிஞன் பாடினான். அதில் பாதி நிறைவேறியிருக்கிறது; பாதி நிறைவேறவில்லை. தமிழ்நாட்டு மருத்துவர்களும் பொறியியல் வல்லுநர்களும் எட்டுத்திக்கும் செல்கிறார்கள். ஆனால், அங்கேயே தங்கிவிடுகிறார்கள்; கலைச்செல்வங்களைக் கொண்டு வந்து சேர்ப்பதில்லை. அதனைச் செய்தால், செம்மொழி உயர்தனிச் செம்மொழியாக மேலும் உயரும்.

41. மேலும், 'திறமையான புலமையெனில், அதனை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்' என அதே பாரதியார் பாடினார். ஜார்ஜ் ஹார்ட் அவர்களும் "வேதத்திற்கும் ஈடான பக்தி இலக்கியங்கள் தமிழில் இருக்கின்றன. ஆனால், அந்தப் பக்தி இலக்கியங்கள் தேக்கம் அடைந்து வருகின்றன" எனத் தம் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். பல்கலைக்–கழகத்திலே இருக்கின்ற பிறதுறைப் பேராசிரியர்கள் நினைத்தால், ஜார்ஜ் எல்.ஹார்டினுடைய ஏக்கத்தைத் தவிர்க்கலாம்.

42. கிரேக்கம், இலத்தீன், பெர்சியன், தமிழ், சமஸ்கிருதம் போன்ற மொழிகளைச் 'செம்மொழி' என்பதற்கும் காரணம், அவற்றினுடைய தொன்மை மட்டும் அன்று; பெருங்காப்பியங்களின் எண்ணிக்கையும் தகுதியும் கூட காரணங்களாகும். அவ்வகையில் தமிழ், காப்பிய காலத்தில் பெற்றிருந்த சிறப்பைப் பிற்காலத்தில் பேணி வளர்க்கவில்லை. 16ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பெருங்காப்பியங்களே தோன்றவில்லை என்று கூடச் சொல்லலாம். காரணம், பெருங்காப்பியங்களை இயற்றுவதற்கு ஆதரவு தந்த பொப்பன காங்கேயன், சடையப்பவள்ளல், வரகுணன், சிற்றரசர்கள், ஜமீன்தாரர்கள் போன்ற வள்ளல்கள் இன்றைக்கு இல்லை. வள்ளல்கள் இல்லை என்றாலும், பெருங்காப்பியங்கள் தோன்றுவதற்குரிய களங்கள் நிறையவே இருக்கின்றன.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, மருதுபாண்டியர்கள் வரலாறு, ஈழத்துப் போராளிகளின் போராட்டம், வியட்நாமின் வீர வரலாறு, இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற களங்கள் காத்திருக்கின்றன. மைய அரசின் நிதியுதவி கொண்டு, பெருங்காப்பியங்கள் இராவண காவியம் போன்று எழுதப் பெறல் வேண்டும்.

43. முத்தமிழில் ஒன்று நாடகம். ஆனால், இன்றைக்குப் படிப்பதற்குரிய நாடகங்களோ, நடிப்பதற்குரிய நாடகங்களோ எழுதப்படுவதில்லை. இன்றைக்குத் தமிழ்நாட்டில் துணுக்குத் தோரணங்களே நாடகங்கள் என்ற பெயரில், மொழிக்கொலையோடு அரங்கேறுகின்றன. மனோன்மணீயம் போன்ற நாடகங்கள் தொடர்ந்து தமிழ்மொழியில் இயற்றப்பட வேண்டும்.

44. ஒப்பாய்வு என்பது இன்று எல்லா மொழிகளிலும் துரிதமாகவும் நடந்து கொண்டிருக்கிறது. சார்ந்து நின்றால் தான் மொழிகள் வளரமுடியும் என்ற எண்ணம் மேலை நாடுகளில் ஆழமாக வேரூன்றி நிற்கிறது. கம்பனும் – மில்டனும், ஹோமரும் – வில்லிபுத்தூரரும், பாரதியும் – வேட்ஸ்வொர்த்தும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் – ஷெல்லியும், பெரியாரும் – இங்கர்சாலும் போன்ற களங்களை எடுத்துக் கொண்டு, ஒப்பாய்வு செய்தால், இரண்டு மொழிகளும் வளம் பெறும். மேலும், பல்வேறு இந்திய மொழிகளிலுள்ள ஒற்றுமையும் வேற்றுமையும் பொருந்திய படைப்பாளிகளை ஒப்பிட்டு ஆய்வு நடத்தினால், தேசிய நீரோட்டத்திற்கும் துணையாக அமையும்.

45. தமிழ், தமிழர்கள் அனைவருக்கும் உடைமை, உரிமை, ஊர் கூடித்தேர் இழுத்தால்தான் நகரும். தமிழர்கள் அனைவரும் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டால், மீண்டும் ஒரு பொற்காலம் பிறக்க வாய்ப்பிருக்கிறது.

# மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தோற்றமும் ஏற்றமும்

பெரும்புலவர், தமிழ்ச் சங்கச் செம்மல் இரா.இளங்குமரன்

பாண்டித்துரையார் கி.பி. 1867 இல் பிறந்தார்.

அவர் பிறக்குமுன்னரே,

"தமிழ் இருந்தது;
தமிழர் இருந்தனர்;
தமிழ் கற்றவர் இருந்தனர்;
தமிழ் கற்பித்தவர் இருந்தனர்;
தமிழ் நாவலர் பாவலர் கவனகர் எனப்பலரும் இருந்தனர்;
தமிழ் மடங்கள் இருந்தன;
தமிழ்க் குறுநில மன்னர்களும் இருந்தனர்;
தமிழ் ஏடுகள் இருந்தன;
தமிழ் ஏடுகள் எழுதுவார் இருந்தனர்;
தமிழ் ஏடுகளைத் தொகுத்தாரும் இருந்தனர்;
தமிழ் நூல் பதிப்பகங்கள் - அச்சகங்கள் இருந்தன;
தமிழ் நூல் படியெடுக்கும் "திருக்கைக் கோட்டிகள்" இருந்தனர்;
தமிழ் - கிழமை, மாத - இதழ்கள் இருந்தன;"

எனினும் 'தமிழ்ச்சங்கம்' என ஒன்று இல்லை! தமிழ் கூறும் நல்லுலகில் பழந்தமிழ்ச்சங்கங்களுக்குப் பின் - தமிழ்ச்சங்கம் - என ஒன்று இல்லை!

பாண்டித்துரையார் பிறந்தபோது (1867)

"தமிழுக்காக இதழ்கள் இல்லை;
தமிழ் இதழ்கள் எதுவும் தமிழ்ப்பெயர் தாங்கவில்லை;
தமிழ்ப்பல்கலைக் கழகம் இல்லை;
தமிழ் வளர்ச்சித் துறை இல்லை;
தமிழ்ப் புலமைத் தேர்வு இல்லை;
தமிழ்ச் சங்கமென ஒன்றில்லை;

தமிழ்ச் சுவடிச் சாலை, பொதுவில் இல்லை;
தமிழ்ப்புலவர் கூடி ஆயும் அமைப்பு இல்லை;
தமிழ் கற்பிக்கும் கலைச்சாலைகள் இல்லை;
தமிழ் நூல் அரங்கேற்றப் பொது அவையம் இல்லை;
தமிழுக்கெனவே அமைந்த பொது அச்சகமும்
பதிப்பகமும் இல்லை; தமிழ் அரசு இல்லை;
தமிழ்நாடு என்னும் பெயர் தானும் இல்லை;
தனித்தமிழ் இயக்கம் தோன்றவில்லை;"

- இத்தனை இல்லைகளுக்கு இடையே,
பாண்டித்துரை என்னும் ஒருவர் பிறந்து வளர்ந்தார்.
பாற்கர சேதுபதி என்பாரும் பிறந்து வளர்ந்தார்.

'இல்லை'களை எல்லாம் 'இல்லை' ஆக்கினார்!

கி.பி. 1901இல் பாண்டித்துரையாரும் பாற்கரரும் மதுரை மாநகரில் தமிழ்ச்சங்கம் கண்டனர். தாம்குடியிருந்த வளமனையைத் தமிழ்த்தாய் வீற்றிருந்து ஆட்சி நடத்தும் சங்க நிலையம் ஆக்கினார். 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' எனப் பெயர் சூட்டினார். அந்நாளில் தமிழ்க்கோலோச்சிய அறிஞர்களையெல்லாம் ஒருங்கே கூட்டினார். ஒன்பான் நோக்கங்களை முன் வைத்தார் சங்கத்திற்கு :

1. தமிழ்க் கல்லூரி உண்டாக்குதல்.
2. இறவாது உள்ள ஏடுகளையும் அச்சிட்ட நூல்களையும் தேடிப்பெற்றுப் பலருக்கும் பயன்படுமாறு தொகுத்து வைத்தல்.
3. வெளிவராத அரிய நூல்களை ஆராய்ந்து அச்சிட்டுப் பரப்புதல்.
4. வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தல்.
5. தமிழ்க்கல்வி பற்றிய இதழ் வெளியிடுதல்.

6. தமிழில் தேர்வு நடத்தி அத்தேர்வில் உயர்நிலையில் தேறினவர்க்குப் பட்டமும் பரிசுகளும் வழங்குதல்.

7. தமிழ் அறிஞர்களைக் கொண்டு பேருரையாற்றச் செய்தல்.

8. தமிழ்த் திறமிக்க புலவர் பெருமக்களை ஒருங்குகூட்டித் தமிழாராய்தல்.

9. வேண்டத்தக்க புதுநூல்களும் புத்துரைகளும் படைத்து அவற்றை அரங்கேற்றுதல்.

இந்நோக்கங்கள் ஒன்றனையும் நிறைவேற்றல் 'தீர்மான' அளவில் முடியுமா? முழுமையான அளவீட்டுத் திட்டம்தானே தீர்மானம்! இவற்றை நிறைவேற்றத் தோற்றுவிக்கப்பட்ட அமைப்புகள் ஏழு; அவை:

1. சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை.
2. பாண்டியன் புத்தக சாலை
3. நூல் ஆராய்ச்சிச் சாலை
4. கல்விக்கழகம் – வித்துவக்கழகம்
5. தமிழ்ச்சங்க முத்திராசாலை என்னும் அச்சகம்
6. செந்தமிழ் என்னும் திங்கள் இதழ்
7. தமிழ்த்தேர்வு

என்பன. இவ்வமைப்புகளின் செயற்பாடுகள் எப்படி?

மாணவர்க்கு உண்டி உடை, உறையுள் முதலியன வழங்கிச் செந்தமிழ்க் கல்வி பயிற்றும் கல்லூரியாகச் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை விளங்கியது.

பலப்பலர்க்கும் பயன்படும் பெருநூல் நிலையமாகப் பாண்டியன் புத்தக சாலை திகழ்ந்தது.

தமிழ்நாட்டுத் தகவுடைய அறிஞர்களையெல்லாம் வேண்டிச் சங்கத்திற்குக் கல்வி வகையால் உதவுமாறு வித்துவக் கழகமென்னும் கல்விக்கழகம் பொலிந்தது.

தமிழ்வளர்ச்சிக்கு வேண்டுவனவற்றை ஆராயும் பொருட்டு இக்கழகத்தார் ஆண்டுதோறும் கூடி ஆய்ந்து கண்ட முடிவைச் சங்கம் முனைந்து செயலாற்றியது.

அச்சிடப் பெறாத செந்தமிழ்ச் சுவடிகளைத் தேடித் தொகுத்தலும் அவற்றைச் செவ்வையாகப் படி எடுத்தலும் ஒப்பிட்டு ஆராய்ந்து பதிப்பித்தலும் ஆகிய பணிகள் *தொன்னூல் ஆராய்ச்சிப் பகுதியினரால்* மேற்கொள்ளப்பெற்றன.

*செந்தமிழ்* என்னும் திங்கள் இதழ், சங்கம் தனக்கென ஓர் அச்சகம் தோற்றுவித்த பின்னர்த் தொடங்கப்பட்டது (1903). "தமிழின் செம்மையினை உலகிற்கு நன்கு அறிவுறுத்தலானும், செந்தமிழ் வளர்ச்சியே செய்தலானும், செவ்விதாய தமிழாலே நடத்தலானும், செந்தமிழ் நாட்டுத் தலைநகர்க் கண்ணே தோற்ற முடைத் தாகலானும் செந்தமிழ் எனப்பெயர் பெற்று விளங்கியது" என்கிறது செந்தமிழ் முதலிதழ் முகவுரை (சுபகிருது; கார்த்திகை).

தமிழுக்கு வாய்த்த முதல் அடை, செம்மை. 'செந்தமிழ்' என்பது தொல்காப்பியர் ஆட்சி. செந்தமிழ் முதல் இதழில் *'உயர் தனிச் செம்மொழி'* என்னும் கட்டுரை வெளிவந்தது.

# சித்தர் பாடல்கள் : ஆண் கதையாடலில் "பெண்உடல்"

முனைவர் தே.ஞானசேகரன், தமிழ் இணைப் பேராசிரியர்,
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை

"ஒரு அழகிய இளம் பெண் பெருக்கெடுத்தோடும் ஆற்றைக்கடக்க தனக்கு யாரேனும் உதவுவார்களா என்று நின்றிருந்தாள். அப்பொழுது இரண்டு துறவிகள் ஆற்றைக்கடக்க முயன்றதை அறிந்து அவர்களிடம் உதவி கேட்டாள். அவளுக்கு உதவ ஒரு துறவி முடிவு செய்து அவளைத் தன் தோள் மீது கட்டி அணைக்கச் சொல்லி நீந்திச் சென்று கரை சேர்த்து நடக்கத் தொடங்கினார். அப்பொழுது அவருடன் இருந்த மற்றொரு துறவி நீங்கள் ஏன் அப்பெண்ணுக்கு உதவினீர்கள்? இது சரியானது தானா? என்று கேட்டுக் கொண்டே வந்தார். இக்கேள்விக்கு அப்பெண்ணின் உடலை நான் ஆற்றின் கரையிலேயே இறக்கி விட்டுவிட்டேன். நீங்கள் தான் இன்னும் சுமந்து கொண்டு வருகிறீர்கள் என்று இளம் பெண்ணுக்கு உதவிய துறவி சொன்னாராம்". – இது ஜென் துறவிகள் பற்றி சொல்லப்படும் ஒரு கதை. இக்கதை துறவியான பின்பும் அவன் உள்ளத்தில் பெண்ணுடல் குறித்த சிந்தனை இருந்து கொண்டே தான் இருக்கும் என்பதற்காகச் சொல்லப்படுவது ஆகும். இந்தியச் சிந்தனை மரபிலும் தமிழகச் சிந்தனை மரபிலும் "பாலியல்" ஏற்பும் மறுப்பும் சமயம் சார்ந்ததாகவும், ஆன்மிகம் சார்ந்ததாகவும் பார்க்கப்படுகின்றது. இக்கட்டுரை சித்தர் பாடல்களில் பெண் உடல் தொடர்பாக இடம்பெறும் ஆண்மனத்தின் பதிவுகள் எவ்வகையில் ஓர் ஆணாதிக்கப் பனுவலாக அதாவது கதையாடலாகக் கட்டப்பட்டுள்ளன என்பதையும் இத்தகைய சிந்தனை மரபின் காண்முனை எது? பெண்உடல் குறித்து சித்தர் பாடல்கள் முன்வைக்கும் கருத்துக்கள் எவை? என்பதையும் இனங்கண்டு சொல்ல முயல்கிறது.

உலக வரலாற்றில் பெண்கள் (The Womens History of the world) எனும் நூலில் ரோஸலிண்ட்மைல்ஸ் மனிதகுல வரலாறு முழுதும் பெண் உடல் மீது ஆண் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட நடத்திய நெடிய வரலாறாக அமைந்திருக்கின்றது என்று சொல்லியிருப்பது மிகச்சரியான சிந்தனையென்றே சொல்லவேண்டும். காரணம் தொடக்க காலத்தில் உடல் ரீதியாகச் சக்தி வாய்ந்த பாலினமாகப் பெண்கள் கருதப்பட்டனர். பெண்ணிடமுள்ள பிள்ளைப்பேறு பெறும் ஆற்றல் அவளிடம் ஆணை அச்சம் கொள்ள வைத்தது. வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரித்தல் காலத்தில் பெண்ணைச் சார்ந்தே ஆண்கள் வாழ்ந்தார்கள். இதன் பின்னர் கலப்பை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் உற்பத்திப் பெருக்கும், சேமிப்பும் தோன்றியதைத் தொடர்ந்து ஆணாதிக்கம் தலைதூக்கியது. (அதுவரை தெய்வம் கூட தாய் தெய்வமாகத்தான் இருந்தது) தாய்வழி ஆதிக்கம் வீழ்த்தப்பட்டது. தந்தைவழி ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு உலக மதங்கள் அனைத்தும் ஆணாதிக்கத்துக்குப் பக்கபலமான கருத்துக்களைத் திட்டமிட்டுப்பரப்பி வந்தன. இப்போதும் பரப்பி வருகின்றன. பெண் உடல் பலவீனமானது; நச்சுப் பொய்கை; தீட்டானது; என்ற கருத்துகள் உலக மதங்கள் முழுவதிலும் ஆண் கதையாடலாக முன் வைக்கப்பட்டிருப்பதை நாம் இங்கே நினையலாம். மேலும் பெண் பாலியல் ரீதியாக வலிமையானவள், வெற்றி கொள்ள முடியாத ஆற்றல் மிக்கவள் என்ற பெண் பற்றிய அச்சம் லிங்கமையவாதம் நிலைபெறும் வரை உலகம் முழுவதுமாக ஆண் கதையாடல்களில் நிறைய இடம் பெற்றுள்ளது. "இந்தியச் சூழலில் பாலியல் ஏற்பும் பாலியல் மறுப்பும் சமயம் சார்ந்த ஆன்மிகம் சார்ந்த எல்லைகளை அடைந்தன. துறவு–புலன் அடக்கம்–இச்சைமறுப்பு என்பன பற்றிய நீண்ட விவாதங்கள் இதனை உறுதிப்படுத்தும். இன்னும் சொல்லப்போனால் பாலியல் இச்சைகளை முறைப்படுத்துவதை இந்தியச் சமயங்களில் பெரும்பாலானவை செய்து வருகின்றன". இந்தியப் பொது மனத்திலும் இந்தச் சிந்தனை நிறையவே இடம் பெறுகின்றது. ரிக் வேதத்தில் புரூர்வனுக்கும் ஊர்வசிக்கும் நடக்கும் உரையாடலில் "பெண்களின் காதல் நிலையற்றது. பெண்ணின் உடலுக்குள் இருப்பது கழுதைப் புலிகளின் இதயம்" என்பதாக இது பதிவானது. மகாபாரதத்தில் "பெண்களே அனைத்துத் தீமைகளின்

வோர்கள்" என்பதாகப் பதிவானது. பெண்கள் பாவத்தின், தீமையின், மாயைகளின் வடிவானது இந்தத் தளத்தில்தான். பெண்களின் இச்சையும் பாலியல் மிகு சக்தியும் இந்திய ஆண்மையை மனஅமைப்பில் மிகவும் பலமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. பெண்களின் பாலியல் இச்சைக்கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியாதது என்று ஒரு புரிதல் ஏற்பட்டபின் இவர்களின் மொத்த தத்துவப் பார்வையும் மாற்றத்திற்குட்பட்டது. ஆண்கள் பெண்களின் மீது முழு பற்று கொள்ளாமல் இருப்பதே அவர்களுக்கான 'பலம்' என்பதை மகாபாரதம் திரும்பத் திரும்பக் கூறிச் செல்வது இதனால்தான்" இந்து மதத்தின் சட்ட நூல் என்று சொல்லப்படும் "மநு" வில் பெண்கள் குறித்துச் சொல்லப்படும் சில கருத்தாடல்கள். காமம், சினம், பொய், துரோக எண்ணம், ஒப்பனை, இருக்கை, படுக்கையாவும் பெண்கள் பொருட்டே தோற்றுவிக்கப்பட்டன. பெண் பிறவியைத் தூய்மையாக்கும் செயல்பாடுகள் எதுவும் இல்லை. பெண்ணுக்கு வெள்ளை உள்ளமும் இல்லை; பொய்மைப் போல அழகுடையவர் ஆவர். வேண்டாம் என்று கணவன் விலக்கி வைத்தாலும் வேறொருவனுக்கு விற்றுவிட்டாலும் அவளின் மனைவித் தன்மை மாறாதது. ஆதி நாள் முதல் இது தான் மரபு என்று விரிகிறது. புத்தரும் பெண்ணாசை துன்பத்திற்குக் காரணமென்றும், பெண்ணுடல் தூய்மையற்றதென்றும் கருத்துக் கொண்டிருந்தார் என்பதை,

> "ஒரு பெண்ணின் உடம்பு அழுக்கு நிறைந்தது
> சட்டத்திற்குரிய ஒரு கொள்கலன் அல்ல"

என்ற அவரின் சிந்தனை மெய்ப்பிக்கும்.

சமண சமயம் இல்லறம், துறவறம் என்று இரு நிலைகளையும் பேசினாலும் துறவறம் என்று வரும்போது அது பெண்ணாசையைத் துறக்கும் கடுந்துறவையும் வேண்டிநிற்கக் காணலாம். சங்கம் மருவிய காலத்தில் சமணர்களால் தோற்றுவிக்கப்பட்ட நீதி இலக்கியங்களில் கடவுளை அடையும் முத்தி நிலைக்குப் பெண்கள் தடையாக இருக்கின்றார்கள் என்ற கதையாடல்கள் நிறைய இடம் பெறத் தொடங்கின. "பெண் தீங்கானவள் என்ற ஒரு கருத்தியலின் வளர்ச்சி வரலாற்றில் இக்கால கட்டத்திலேயே வளர்ச்சியடைந்தது. சங்க காலத்தில் கருவள ஆற்றலுக்கெனப் போற்றப்பட்ட பெண் தற்போது

சமூகத்தின் தீய சக்தி எனக் கருதப்பட்டாள். பௌத்தர்களாலும், சமணர்களாலும் முன்னெடுக்கப்பட்ட துறவு மார்க்கம் வீடு, உறவு, ஆசைகள் யாவற்றையும் துறப்பதை வலியுறுத்தியது. இதைச் சாதிப்பதற்குப் பாலியல் விருப்பின்மை பெரிதும் அவசியம் எனக் கருதப்பட்டது. அனேகத் துறவிகளுக்குத் தமது பால்மையைத் துறத்தல் அதிக சிரமமானதாக இருந்தது. ஆசையைத் துறந்த உறுதியான தவ முனிவர்களின் தவத்தைத் தம் கவர்ச்சியால் கலைத்த கன்னிகள் பற்றிய கதைகள் இந்து மரபில் ஏராளமாக உள்ளன. குடும்பத்தளை, பால் உந்தல், உலக இச்சை ஆகியவற்றுக்குப் பெண்கள் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டனர். பெண்ணின் பால்மையுடன் தொடர்புடைய இவை அனைத்தும் துறவு மார்க்கத்தினரால் தீவிரமாகத் தகர்க்கப்பட்டன." உடல் சார்ந்த பாலியல் உந்துதலும் பற்றற்ற நிலைக்கு ஒரு தடையாகும் என்றும் இந்த இச்சைகள் பெண்களாலேயே தூண்டிவிடப்படுகின்றன என்றும் நம்பப்பட்டது. ஆகவே இக்கால கட்டத்தில் தமிழர்களால் போஷித்து வளர்க்கப்பட்ட தமிழ் – பௌத்த இலக்கியங்களில் பெண்கள் ஒருமுகமாகத் தூற்றிக் கண்டிக்கப்பட்டனர். இதற்கு மேலும் பல உதாரணங்கள் தரலாம். பெண்கள் மரணத்துடன் ஒப்பிடப்பட்டனர். அவர்களைக் கவனமாகக் கையாள வேண்டும் என ஆண்கள் போதிக்கப்பட்டனர்.[5] (நான்மணிக்கடிகை : 82) மது, பொய்மை, கொலை, களவு என்பன பாலியலுடன் ஒப்பிடப்பட்டன. பொதுவாகப் பாலியல் பெண்மையோடு இனங்காணப்பட்டு அதற்குச் சமதையாக்கப்பட்டது (மணிமேகலை: 2056, 59) நாலடியாரில் வரும் பெண்மையின் ஆபத்துப் பற்றிய கருத்தியலுக்கு நல்ல உதாரணமாகும்.

"எறி என்று எதிர் நிற்பாள் கூற்றம், சிறு காலை
அட்டில் புகாதாள் அரும்பிணி, அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ் பேய், இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை" (363)

இங்கு கீழ்ப்படியாத பெண் எமனாகவும், நோயாகவும், பேயாகவும் உருவகம் செய்யப்படுவதைப் பார்க்க முடியும். "பௌத்த சிந்தனையில் பெண்கள் உடல் இச்சையோடு சம்பந்தப்பட்டவர்களாயினர். அவர்கள் ஒரு நோய் போல் அழிவுக்குக் குறியீடாக உள்ளனர் என்று நம்பப்பட்டது. இந்தச் சூழலில்தான் "தையற் சொல் கேளேல்" போன்ற பழமொழிகள் தோன்றத் தொடங்கின. இந்தச் சிந்தனைகள் நாட்டார்

மரபிலும் கூட இடம் பெற்றன. "பெண் புத்தி பின் புத்தி" "பெட்டைக்கோழி கூவி பொழுது விடியுமா?" "ஒருழவு உழுதாலும் உழவு ஒரு புள்ள பெற்றாலும் கிழவி" என்றும் "சீறி வரும் பாம்பை நம்பினாலும் சிரிச்சு வரும் பெண்ணை நம்பக்கூடாது" "கோடிச் சேலை ஒரு வெள்ளைக்கும் குமரிப்பெண் ஒரு பிள்ளைக்கும்" என்றவாறு பெண்ணும் பெண்ணுடலும் தாழ்வாக எண்ணப்பட்டன. மேலும் பூப்புக்காலம் தீமையெனத் தள்ளி வைக்கப்பட்டது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இந்தக் கருத்தினூடே பெண்ணுடலை உடைமைப் பொருளாகக் கருதும் ஆணின் சிந்தனை மரபையும் இங்கே எண்ண வேண்டியுள்ளது. பரிசம் கொடுத்து பெண்ணை வரைவுக்கு உட்படுத்தும் வழக்கம் பெண்ணை ஒரு பொருளாகக் கருதும் சிந்தனையின் தொடக்கம் எனலாம். பெண் ஒரு பொருள் எனும் போது அது வணிகத்தன்மையுடையதாகவும் ஆகிப்போய் விடுகிறது. அதனால்தான் தன்னையே விலை கூறி விற்பவளாகப் பெண் சித்தரிக்கப்படுகின்றாள். இதற்கு முதல் எடுத்துக்காட்டு 1008 பொன் கழஞ்சுக்குத் தன்னை விற்றுக் கொள்ளும் மாதவி. இந்த மரபு நமது கலை இலக்கியங்களில் எல்லாம் காலங்காலமாய் தொடர்ந்து வருவதே. விறலி விடு தூது இதற்கு நல்ல இன்னொரு உதாரணம். இதனால்தான் தமிழ்ச் சிந்தனை மரபில் ஒரு பெண் தன்னை,

"சரக்கு வச்சிருக்கேன்
இறக்கி வச்சிருக்கேன்
....................
....................
அவுச்ச கோழி நான்
ஆடை போட்டு மூடிய அல்வா
துண்டு நான்
....................
கோழி ருசியா
இருந்தா கோழிய வெட்டு
குமரி ருசியா இருந்தா
குமரியை வெட்டு"

என்று வர்ணித்துக் கொள்ள முடிகிறது. ஆனும் ஒரு பெண்ணிடம்,

"ஒத்த ரூபா தாரேன்
ஒணப்புத்தட்டும்
தாரேன்
ஒத்துக்கிட்டு வாடி
நாம
ஓடைப்பக்கம் போவோம்"

என்று விலை பேச முடிகிறது. இங்கே நாம் பார்த்த பெண்ணுடல் குறித்த ஆணின் உடைமைச் சிந்தனை தமிழ்ச் சிந்தனை மரபில் இருவகைச் சிந்தனையுடையன. ஒன்று மனைவி எனும் வரையறுக்கப்பட்ட பாலியல் உறவுக்கானவள் என்பது, பரத்தை அதீதப்பாலியல் உறவுக்கானவள் என்பது மற்றொன்று. இதில் ஆணின் முழுமையான உடைமைப் பொருள் என்று கருதப்படும் மனைவி அவனின் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக, அவனுக்கு எப்பொழுதும் அடங்கிப் போகிறவளாக அவனையே தெய்வமென்று வணங்கி எழும் பத்தினியாக இருக்க வேண்டுமென்று இந்தியச் சமய மரபும் தமிழ்ச் சமய மரபும் வேண்டி நிற்பதை நாம் இங்கே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இப்படியான "மனைவி அமைவது இறைவன் கொடுத்த வரமென்று" நமக்குத் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளது. கற்புடைய பெண்ணைத் தெய்வமென்று போற்றுகின்றபோதே கற்பு நெறி தவறிய அழகிய இளம் பெண்களை மாயப் பிசாசென்றும், காமப்பிசாசென்றும் தூற்றுவதையும் தமிழ் இலக்கியங்கள் தனது கதையாடல்களாக முன் வைத்தன என்பதையும் நாம் நினையலாம்.

### *சித்தர்கள் : உடல் பற்றி கருத்தாக்கம்*

சித்தர்கள் என்போர் சில சித்திகள் (சிறப்பு ஆற்றல்கள்) கைவரப் பெற்றவர்கள் என்றும் சித்தத்தைச் சிவன் பாலே வைத்தவர்கள் என்றும் கூறுவது தொல் வழக்கு. சித்தர்கள் என்போர் தங்களின் சுய சிந்தனைக்கு முதன்மை கொடுத்தவர்கள் – சித்தம் ஒப்புக் கொள்ளும் உண்மையை மட்டும் தரிசித்தார்கள் என்று இவர்கள் குறித்துச் சொல்லுவர். இச்சித்தர்களில் முதன்மையானவராகக் கருதப்படும் திருமூலர் எழுதிய திருமந்திரம் சைவ சமயம் தொடர்பான பல கருத்துக்களைத் தொகுத்துத் தருவது என்பதை விட பல புரட்சிகரக் கருத்துக்களைத் தெரிவிக்கும் நூலாகவும் அமைகிறது. கோயிலை விட மனிதன் முக்கியம்; அன்பே இறை, உடம்பே கோயில்

இதுதான் திருமூலரின் முடிந்த முடிவான கருத்து என்று அறிகிறோம். இதனைத் திருமூலரின்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்"
"உள்ளம் பெருங் கோயிலூனுடம்பாலயம்"

என்ற பாடல்கள் தெரிவிக்கும். திருமூலர் உடல் பற்றி அறிவியல் நெறியிலான தெளிவான புரிதலைக் கொண்டிருந்தார் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்படு மெய்ஞானஞ் சேரவு மாட்டார்

"உடம்பைவளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

ஆனால் இதே காலகட்டத்தில் வாழ்ந்த நாவுக்கரசர் போன்றோர் உடம்பை இழித்தும் பழித்தும் பேசினர் என்பதை நாவுக்கரசரின்,

"புழுப் பொய்த பண்டிதன்னைப் புறமொடு தோலான் மூடி
ஒழுக்கறா ஒன்பதுவா பொற்றுமை ஒன்றுமில்லை
சழக்குடை இதனுள் ஐவர் சங்கடம் பலவும் செய்வர்
அழிப்பனாய் வாழ மாட்டேன் ஆரூர் மூலட்டனீரே"

என்ற பாடலின் மூலம் தெரியலாம். இச்சான்றுகள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களிடையே அதுவும் ஒரே இறை கொள்கையுடையோரிடையே மனித உடம்பு உயர்வானதாகவும், இழிவானதாகவும் கருதப்பட்டதைக் காட்டுகின்றன. இவ்வாறான மாறுபாடான கருத்துக்கள் ஏன் தோன்றின என்று பார்த்தோமானால்; தமிழர் இறை பற்றிய கொள்கையில் பௌத்தம், சமணம் போன்ற சமயங்களின் தாக்கங்கள் இருந்ததும் ஒரு காரணம் என்று தெரிய முடியும்.

தமிழகத்தில் கி.பி. 7,8,9 ஆம் நூற்றாண்டுகளில் சமயப்போர் மும்முரமாக நடைபெற்றது என்று சொல்லப்படுகிறது. அந்தச் சமயப்போர் முக்கியமாக மூன்று மதங்களிடையே நிகழ்ந்தது. இந்து மதத்துக்கும் சமண சமயத்துக்கும், இந்து மதத்துக்கும் பௌத்த மதத்துக்கும், பௌத்த சமயத்துக்கும் சமண சமயத்துக்கும் ஆக மும்முனைப்போர் நடைபெற்றது. சமயப்போர் கடுமையாக நடந்த

காலத்திலும் சமண சமயம் குன்றிய காலத்தில் சமணரிற் பெரும்பாலோர் இந்து மதத்தில் சேர்ந்து வைணவராகவும் மதம் மாறிவிட்டனர். இவ்வாறு இந்து மதத்தில் புகுந்த சமணர் வாளா வெறுங்கையோடு வந்துவிடவில்லை. சைவ வைணவராக மாறிய சமணர் தம் சமணசமய ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் இந்து மதத்தில் புகுத்திவிட்டனர். ஏற்கனவே திராவிட வைதீக மதங்களின் கொள்கைகள் கலக்கப்பெற்றுப் புதிய உருவடைந்த இந்து மதத்தில் இன்னும் புதியதாகச் சமணக் கொள்கைகளும் கலக்கத் தொடங்கின. இதனோடு நின்றபாடில்லை. இக்காலத்திலேயே தமிழ்நாட்டிலிருந்த பௌத்த மதத்தினரும் இந்து மதத்தோடு சேரத் தொடங்கி அவர்களும் தம் சமணக் கொள்கைகளிற் சிலவற்றைப் புதிய இந்து சமயத்துடன் சேர்த்துவிட்டார்கள்". இறைவனை அடைவதற்குக் கடுந்தவம் புரிந்து இந்த மனித உடம்பைத் துறக்க வேண்டுமென்ற சிந்தனை இந்து மதத்தின் பிரத்யேகச் சிந்தனையாக ஒருபுறம் வலியுறுத்தப்பட்டே வந்துள்ளது. இச்சித்தர்களின் பாடல்களிலும் இடம்பெற்று இந்த அழியும் உடம்பை வெற்றி கண்டு மரணமிலாப் பெருவாழ்வை எய்த வேண்டும் என்ற சிந்தனையாக வெளிப்படுவதைப் பார்க்க முடியும். காட்டாக,

> "காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்தப் பையடா
> மறந்து மலசலங்கள் மாயும் புழுக்கூட்டை விட்டு
> கரந்துன் அடியினைக் கீழ்க் கலந்து நிற்பதெக்காலம்
> சோற்றுத் துருத்திதனைச் சுமந்தலைந்து வாடாமல்
> ஊற்றைச் சடம் போட்டுனையடைவதெக்காலம்"
>
> (பத்திரகிரியார் 41–46)

இப்படி உடல் குறித்துச் சிந்திக்கையில் சித்தர் பாடல்களில் மனித உடல் அழுக்கு (ஊத்தை) நிறைந்தது, அழிந்து போவது, நிலையற்றது என்ற சிந்தனை அடிக்கடிப் பேசப்படுகிறது. மேலும் பெண்ணுடனான பாலியல் உடலின்பம் சிற்றின்பமாகவும் இதை மறந்து இறைவனையடையும் பேரின்ப (ஆன்மா) நிலையை அடைதல் மனித வாழ்வின் நோக்கமாகும் என்றும் சித்தர்கள் வலியுறுத்தினர்.

"கருவின் வழியறிந்து கருத்தைச் செலுத்தாமல்
அருவி விழி சொரிய அன்பு வைப்ப தெக்காலம்"

இப்படி வளர்ந்த பெண்ணுடல் மீதான வெறுப்பு பெண்ணுடல் ஆணுடலைவிட கீழானது, அசுத்தம் நிரம்பியது. விலக்கப்பட வேண்டியது என்று சொல்லும் அளவிற்கு வளர்ந்ததைப் பிற்காலச் சித்தர்களின் பாடல்களில் நிறையக் காண்கிறோம். இந்தச் சிந்தனை திடீரெனத் தமிழ்ச் சிந்தனை மரபில் தோன்றிவிடவில்லை. இச்சிந்தனை இந்திய வேத மரபிலிருந்து தொடங்கி இந்து சமயத்தில் அதாவது வைதீக மரபில் நிலைபெற்று தமிழ்ச் சிந்தனை மரபிலும் தமிழகச் சமயமரபிலும் (சைவம்) கலந்தது. இதற்கிடையே பெண்ணுடல் மீதான அதீத வெறுப்பு பௌத்த சமண சமயத்திடையே இருந்ததையும் இங்கே நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியச் சிந்தனை மரபில் மநுவுக்கு உடல் பற்றிய கருத்தாக்கத்தில் பெரும் பங்குண்டு. கடவுளைக் கட்டமைக்கையில் கூட மநு உடலற்ற கடவுள் என்று கட்டமைக்கிறார். இந்த உடலற்ற கடவுள் தத்துவம் உடலைக் கீழ்மைப்படுத்தி அடிமைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டது. இதனைப் பிறவா யாக்கைப் பெரியோனாகச் சிவனைத் தமிழ் மரபு ஏற்றுள்ளதை இங்கே நினைய வேண்டும். ஆக கடவுள் உடலற்றவனாக இருக்கும்போது; உடலுடன் இருக்கும் மனிதன் புனிதமற்றவனாகக் கருதப்பட்டு கடவுளிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டான். ஆக உடலற்ற கடவுளை அடைவதற்கு மனித உடல் தடையாக அமைவதாக நம்பப்பட்டது. இந்த உடல் பற்றிய சிந்தனை சித்தர்களின் பாடல்களில் ஏற்கப்பட்டும், மறுக்கப்பட்டும், விவாதப் பொருளாக்கப்பட்டுள்ளதையும் காண முடியும். இவ்வாறு பெண் உடலை சித்தர்கள் (ஆண்) வெறுத்தொதுக்குவதற்கும் சித்தரிப்பதற்குமான சமூக, உளவியல் காரணங்கள் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அவர்களின் பெண் உடல் குறித்த கதையாடலை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)

# குலசேகர ஆழ்வார் பாடல்களில் அகமரபுக் கூறுகள்

பேரா முனைவர் கூ.முத்தன்
மதுரை

### முன்னுரை

தமிழக வரலாற்றில் களப்பிரர் காலத்தை 'இருண்ட காலம்' என்று கூறுவதற்கு அவர்களின் அரசியல் மற்றும் சமூக வாழ்க்கைத் தளத்தை மட்டும் மையப்படுத்திக் கூறப்படவில்லை. அவர்களின் சமயப்போக்கே இக்கூற்றுக்குப் பெரும்பங்களிப்பைச் செய்தது. களப்பிரர் காலத்தில் பௌத்த, சமண மதங்கள் அரசர்களின் ஆதரவுபெற்று இவ்விரு சமயங்களும் சமூகத்தின் பொதுச் சமயங்களாக்கப்பட்டன. பொதுச் சமயங்கள் என அறிமுகமாகி மக்களிடத்தில் வளர்ந்து வரும் நிலையில் அவ்வக்கால கட்டத்தில் உள்ள ஏனைய மதங்கள் ஒடுக்கப்படுவதும், அழிக்கப்படுவதும் இயற்கையே. அவ்வாறு களப்பிரர் கால கட்டத்தில் பௌத்த, சமண மதங்கள் வளர்ந்து வரும் நிலையில் இந்து மதத்தின் உள்ளடக்கமான சைவ, வைணவ மதங்கள் பல்வேறு தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டன. சிவனையும் திருமாலையும் தம் நெஞ்சகத்தில் சூடி வைத்திருந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல்வேறு தாக்குதல்களுக்கு ஆட்பட்டார்கள். களப்பிரர்கள் ஆட்சி ஒழிக்கப்பட்டு பல்லவ அரசர்கள் சைவ வைணவ சமயத்திற்கு ஆதரவு அளித்தனர். இவ் ஆதரவினைப் பற்றுக்கோடாகக் கொண்ட ஆழ்வார்களும் நாயன்மார்களும் தங்களின் உள்ளக்குமுறலை உயிர்கொண்டு எழச் செய்தனர். அது மட்டுமல்ல. இவ்விரு சமயத்தையும் ஒழுங்குபடுத்தி நிறுவனமாக்கி ஆழ்வார்களும் நாயன்மார்களும் மக்களிடம் கொண்டு சென்றனர். நிறுவனப்படுத்துவதற்கு நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்களின் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் ஒப்படைத்தனர். இந்நிறுவனப்படுத்துவதற்கு இவர்கள் இறைவன் மீது பாடிய பாசுரங்களே பெரிதும் துணை புரிந்தது என்பதில் கருத்து மாறுபாடில்லை. அச்சான்றோர்கள் இறைவனின் புகழைப்பாடி அவனுக்குப் பக்திப்பாமாலை சூட்டியது மட்டுமல்ல, இறைவனை பல கோணத்தில் கண்டு அதில் அவனோடு இணைவதற்கு எளிதான வழி எது எனக் கண்டுபிடித்தனர். அதுவே அகமரபுக் கோட்பாடாகும்.

உலகத்தில் தோற்றம் பெற்ற எல்லா உயிர்களும் இறைவனிடம் சரணாகதி அடைவதற்குத் தன்னிடம் உள்ள மும்மலத்தோடு கூடிய கேவல நிலையை விட்டுவிட வேண்டும். அவ்வாறு விட்டு விடும் போதுதான் ஆன்மாக்கள் இறைவனிடம் சென்றடையும். அவ்வாறு இறைவனிடம் சென்றடைவதற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும் கைக்கொண்ட ஒரு நிலைதான் இறையிணைவுக் கோட்பாடாகும். இந்த இறை இணைவுக்கு அவர்களுக்குக் கைகொடுத்த மரபு அகமரபாகும். இம்மரபின் அடித்தளம் என்பது 'ஒரு தலைவனும் தலைவியும் உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றி இணைவதாகும்'. இந்த ஒன்றிணைவுக் கோட்பாட்டை மனதில் கொண்டு ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கொண்டு இறைவனிடம் உள்ளத்தாலும் உடலாலும் இணைந்து கொள்வதற்கு ஆசைப்பட்டனர். ஆன்மிக அனுபவம் யோக நிலையிலும் போகநிலையிலும் வெளிப்படும். பெரியாழ்வாரை யோகியாகவும் திருமங்கையாழ்வாரைப் போகியாகவும் சான்றோர்கள் குறிப்பிடுவர். ஆக ஆன்மிக அனுபவத்தின் போக நிலையில் பற்றுக் கொண்ட ஆழ்வார்களும் நாயன்மார்களும் காதல் உணர்வைக் கொண்டு அகமரபின் அடித்தளத்தில் இறை இணைவில் ஒடுங்கினர். இவ் அகமரபின் அடித்தளத்தில் திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் எனப் பல சான்றோர்கள் பக்திப் பாசுரங்களைப் பாடியுள்ளனர். இச்சான்றோர்களுள் குலசேகர ஆழ்வாரின் அகமரபுக் கோட்பாட்டை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆழ்வாரின் அனைத்துப் பாசுரங்களையும் கட்டுரைக்கு உட்படுத்தாது ஒரு சில பாசுரங்கள் மட்டுமே எடுத்தாளப்பட்டுள்ளது.

### குலசேகர ஆழ்வார் பாடல்களில் அகமரபுகள்

வைணவ சமயம் ஒரு நிறுவனமாக ஆக்கப்படுவதற்குத் தன்னை ஒப்புவித்தவர்கள் பன்னிரண்டு பேர். அவர்களை 'ஆழ்வார்கள்' என்று அன்புடன் அழைப்பர். அப்பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவர் குலசேகர ஆழ்வார். மன்னர் மரபில் பிறந்து ஆட்சியின் மீதும் இப்புவி வாழ்க்கையின் மீதும் வெறுப்புற்று இறைவனை அடைவதற்கு அவனை நோக்கிச் செல்கின்ற வாழ்க்கையே பேரின்பவாழ்க்கை. இதனை

எண்ணி ஆட்சிப்பொறுப்பையும் புவிவாழ்க்கையையும் துறந்து இறையை நோக்கி வாழ்கின்ற வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். திருமால் எழுந்தருளியிருக்கும் தலங்களுக்கெல்லாம் சென்று இறைவனைக் கண்குளிரக் கண்டு மகிழ்ச்சி பொங்க அவ் இறைவனுக்குப் பக்திப் பாமாலை சூட்டினார். அதுவே "பெருமாள் திருமொழி" என அழைக்கப்படுகிறது. திருவேங்கட மலையில் குருகு, மீன், செண்பகம், தம்பம், பொற்குவடு, கானாறு இவற்றுள் ஏதேனும் ஒன்றாய் வாழவேண்டும் என்று விரும்பியவர். "படியாய்க் கிடந்துன் பவளவாய்க் காண்பேன்" என்றார். படியாய்க் கிடந்து என்று குலசேகர ஆழ்வார் வேண்டியதால் இன்று திருமால் ஆலயங்களில் உள்ள கோயில் படிகள் குலசேகரரின் படி என்று அவ் ஆழ்வாரின் பெயரில் அழைக்கப்படுவதையும் காணலாம்.

***கற்புடைய மகளிர் மாண்பு***

சங்ககாலம் தொட்டு இன்று வரையிலான காலம் வரை பெண்கள் பற்றிய பல்வேறு விதமான கருத்தியல்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்றுதான் பெண் என்பவள், இல்லத்தினை ஒழுங்குபடுத்திக் கணவனுக்காக வாழ வேண்டும் என்பதாகும். காரணம் கணவன் என்பவன் குடும்பத்தின் பொருளாதாரத்தைத் தேடுவது மட்டுமல்ல. சமூகத்தின் உயர்ந்த அதிகாரத் தன்மையில் இருந்தவன். குடும்பத்தில் அனைத்து இயங்கு சக்திக்குக் கணவன் தான் அடித்தளம். ஆகவே, மனைவி என்பவள் கணவனை மையப்படுத்தியே வாழ வேண்டும். அந்தக் கணவன் மனைவி உறவைப் புரிந்து கொண்ட குலசேகர ஆழ்வார்,

> "கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
> கொண்டா னையல் லால்அறி யாக்குல மகள்போல்
> விண்டோய் மதில் புடைசூழ் வித்துவக் கோட்டம்மானே
> பெண்டாளா யாகிலும் உன் குரைகழலே கூறுவனே"

எனப் பாடுகிறார். பார்ப்பவர் இகழும்படியாகச் செய்யக்கூடாத செயல்களைச் செய்து ஒரு கணவன் தன்மனைவிக்கு எத்தகைய துன்பத்தைக் கொடுத்தாலும் குலமகளான அப்பெண் அவனைத்

தவிர வேறொருவனைக் கணவனாக மனதாலும் ஏற்றுக் கொள்ள மாட்டாள் என்ற செய்தியை இப்பாடல் வெளிப்படுத்தி நிற்கிறது. மக்கள் வாழ்க்கைத் தளத்தில் குடும்பம் என்ற கட்டமைப்பு நிறுவனத்தைப் பெண்கள் மீது புகுத்தி எவ்வகையான மன அழுத்தத்தைப் பெண்கள் மீது சுமத்தி இருக்கிறார்கள் என்பன தெளிவாகிறது. நமது குடும்ப வாழ்க்கை, பண்பாடு என்பன குடும்பத்தலைவியாக வரும் பெண் கணவனுக்கு அடிபணிந்து நடந்து கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றன. மனுதர்மமும் ஒரு பெண் கணவனது விருப்பப்படியும் அக்கணவனின் தேவையைப் பூர்த்தி செய்பவளாகவும் தனக்காக அல்லாமல் கணவனுக்காக வாழ்பவளாகவும் இருக்க வேண்டும்; கணவன் எத்தகைய கொடுமைகளைச் செய்தாலும் அன்போடு, எதிர்த்துப் பேசாமல் தாங்கிக் கொள்ள வேண்டும். அப்படி வாழ்கிற குடும்பப் பெண்களுக்குத் தான் சொர்க்கம் கிடைக்கும் என விவரித்து நிற்கிறது. "வினையே ஆடவர்க்கு உயிரே மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" என்ற சங்க காலத் தலைவனின் வாழ்க்கை நிகழ்பாடே இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. ஆன்மா இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்புவிக்க வேண்டும். இறைவன் அவ்வான்மாவை ஏற்றுக் கொள்வதற்கு அதன் நிலைப்பாட்டை அடைந்து அறிந்து கொள்வான். அதன் உன்னத நிலைப்பாடுதான் இப்பாசுரத்தின் வெளிப்பாடு.

***தலைவனின் ஏமாற்று நிலை***

சங்க காலக் காதலன் களவுக் காலத்தில் தலைவியை இரவுக்குறியிலும் பகற்குறியிலும் சந்தித்துப் பேசுவது வழக்கம். சில நேரங்களில் குறி தவறி விடுவதும் உண்டு. இதைத்தான் சான்றோர்கள் அல்குறி எனப் பகுத்துக் கூறினர். அதாவது இரவுக்குறியிலோ அல்லது பகற்குறியிலோ தலைவன் தலைவியைச் சந்தித்துப் பேசுவதற்கு வரச் சொல்லியிருப்பான். ஏதோவொரு காரணத்தால் தலைவன் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். தலைவன் வராதது கண்டு தலைவி வேதனையடைவாள். இச்சூழ்நிலையில் தலைவியைப் பலர் கண்டு அலர் தூற்றுவர். வெட்கத்தையும், அவமானத்தையும் தாங்கிக்

கொண்டு தலைவி வீடு திரும்புவாள். இக்காட்சியமைப்பில் சங்க இலக்கியத்தில் எத்தனையோ பாடல்கள் இருப்பதைச் சான்றோர்கள் நன்கு அறிவர். இந்த சங்ககாலக் காதலர் வாழ்க்கை குலசேகர ஆழ்வாரைக் கவர்ந்திருக்கிறது. பெருமாள் திருமொழி ஆறாம் திருமொழி முதல் பாடலில் ஆயர்குலத்தில் தோன்றிய ஒரு பெண் கண்ணனை நோக்கிப் பேசுவதாகப் பாடல் இயற்றியிருக்கிறார்.

> "ஏர்மலர் பூங்குழ லாயர் மாதர் எனைப்பலருள்ள இவ்வூரில் உன்றன்
> மார்வு தழுதற் காசையின்மை யறிந்தறிந்தே யுன்றன்
> பொய்யைக் கேட்டுகூர் மழைபோல் பனிக்கூதல் எய்திக் கூசிநடுங்கி
> யமுனை யாற்றில் வார்மணற் குன்றில் புலர நின்றேன் வாசுதேவா!
> உன் வரவு பார்த்தே"

கண்ணபிரானே அழகிய மலர்களைச் சூடிய மணமிக்க கூந்தலையுடைய இடைக்குலத்தில் பல பெண்கள் இருக்க என்னை மட்டும் நீ வரச் சொன்னாய். உன்னுடைய மார்போடு தழுவிக்கொள்வதற்கு ஆசைப்பட்டு உன்பொய்யான சொல்லை மெய்யென நம்பி மணலால் சூழப்பட்ட யமுனை நதிக்கரையில் பனியாலும் குளிராலும் ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கிக் கொண்டு யாராவது பார்த்து விடுவாரோ என்றஞ்சி விடியும் வரை காத்திருந்தேன். ஆனால் நீ வராமல் என்னை ஏமாற்றிவிட்டாயே என்பது இப்பாடலின் பொருளாகக் கொள்ளப்படுகிறது. இப்பாடல் சங்ககாலக் காதலரின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவது போல் அமைந்திருக்கிறது. குலசேகர ஆழ்வார் சங்க இலக்கிய மரபைக் கையாண்டுள்ளார் என்பதை விட இறைவனை உறவு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆசைப்பட்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இறைவனைத் தொலைவில் வைத்துப் பார்க்கும்போது இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடைவெளி இருந்து கொண்டே இருக்கும். இவ்விறைவனைத் தாயாக, தந்தையாக, காதலனாக, கணவனாக, நண்பனாக, ஆசிரியனாகப் பார்க்கிறபோது உறவு அடிப்படையில் இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் இடையில் உள்ள வெளி குறையும் என்று நம்பினர் சமயச் சான்றோர்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் குலசேகர ஆழ்வார் இங்கு கண்ணனைக் காதலனாக ஆக்கி இருக்கிறார்.

***தலைவனின் புறத்தமை ஒழுக்கம்***

சங்ககால அக வாழ்க்கையை ஐவகை நிலத்தோடு ஒப்பிட்டுப் பாகுபாடு செய்தனர். அவற்றில் ஒன்றுதான் மருதத்திணை ஒழுக்கமாகும். மருதத்திணையின் ஒழுக்கம் ஊடலாகும்.

பெரும்பான்மையாகக் கற்பு வாழ்க்கையில் தலைவன் கற்புடைய மனையாள் இருக்க அவளைப் பிரிந்து இரவு முழுக்க பரத்தையரிடத்துக் காலம் கழித்து வருவான். தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை அறிந்து அவனோடு மனைவி ஊடல் கொள்வாள். அக்காலத்தில் பரத்தமை ஒழுக்கத்தைப் போற்றவில்லை என்றாலும் சமூகத்தில் ஏற்றுக் கொள்கின்ற பண்பாடாக இருந்து வந்திருக்கிறது என்பதை மருதத்திணைப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. இந்த மருதத்திணை வாழ்க்கை குலசேகராழ்வாரைக் கவர்ந்திருக்கிறது. அந்த ஒழுக்க வாழ்க்கையைத் திருமால் மீது ஏற்றிப் பாடியிருக்கிறார்.

'என்னை வருகவெனக் குறித்திட்டு இனமலர் முல்லையின் பந்தர்நிழல்
மன்னியவளைப் புணரப்புக்கு மற்றென்னைக் கண்டு உழறா நெகிழ்ந்தாய்
பொன்னிற வாடையைக் கையில் தாங்கிப் பொய்ச்சம் காட்டி நீ போதியேலும்
இன்னமென் கையத் தீங்கொருநாள் வருதியே லென்சினம் தீர்வன்நானே"

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. என்னை ஓரிடத்திற்கு வரச் சொன்னாய். நானும் உன்னைத் தழுவிக் கொள்ள உனக்காக நின்றேன். ஆனால் நீயோ மலர்கள் சூழ்ந்து இருக்கின்ற முல்லைப் பந்தர் நிழலில் மற்றொரு பெண்ணை நிற்கச் செய்திருக்கின்றாய். வெகு நேரமாகப் பதுங்கிப் பதுங்கி நின்ற அவளைக் கூடுவதற்காக நீயும் பதுங்கிச் சென்றதனை நான் கண்டுவிட்டேன். உன் செயலைக் கண்டு நானும் சந்தேகம் கொண்டு உன்னைப் பின்தொடர்ந்தேன். என்னைப் பார்த்ததும் எனக்குப் பயப்படுவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு கையில் உனது ஆடையையும் எடுத்துக் கொண்டு தப்பித்து ஓடிவிட்டாய். ஆனால் என்றாவது ஒருநாள் என்னிடம் நீ வந்தாக வேண்டும். அப்போது என் கோபத்தை உன்னிடத்தில் வைத்துக் கொள்கிறேன் என ஓர் இடையர் குலப் பெண் கண்ணனை நோக்கிப் பேசுவதாகப் பாடல் அமைந்திருக்கின்றது. இப்பாடலில் மருதத்திணையில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நிலையை நம் கண்முன் நிறுத்தி வைக்கிறார் குலசேகராழ்வார்.

மருத நிலத்துத் தலைவன் குலமகளை மறந்து பரத்தையிடம் காலத்தைக் கழித்துக் கொண்டிருப்பான். தலைவிக்குக் குழந்தை பிறந்துவிடும். அக்குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை தலைவனுக்கு ஏற்படும். அதற்காக மீண்டும் இல்லத்திற்கு வந்து குலமகளோடு வாழ வேண்டும் என்று ஆசைப்படுவான். தன் ஆசையைப் பாங்கன் மூலமாக அல்லது தோழி மூலமாகத் தெரியப்படுத்துவான். பாங்கன் அல்லது தோழி மூலமாகத் தலைவனின் கருத்தை அறிந்த தலைவி தன்னைத் துன்பப்படுத்திவிட்டு பரத்தையிடம் சென்ற நிகழ்ச்சி தன் சிந்தனைக்கு வரும். அச்சிந்தனையின் விளைவால் தலைவன் இல்லாது தனித்தே வாழ்ந்து விடலாம் என்று எண்ணித் தலைவனைத் தன் இல்லத்திற்கு வர வேண்டாம். அப்பரத்தையிடமே அவர் வாழ்ந்து விடட்டும் என அவள் வாயில் மறுத்து விடுவாள். இக்காட்சி சங்க இலக்கியத்தில் மருதத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இவற்றை உள்வாங்கிக் குலசேகராழ்வார்,

"மீன் ஒத்த நுண்ணிடை யாளைக்கொண்டு
வீங்கிருள் வாய் என்தன் வீதியூடே
பொன்னொத்த ஆடைக்குக் கூடலிட்டுப்
போகின்ற போது நான்கண்டு நின்றேன்
கண்ணுற்றவளை நீ கண்ணால் இட்டு
கைவிழிக்கின்றதும் கண்டே நின்றேன்
எற்றுக்கு அவளை விட்டு இங்கு வந்தாய்
இன்னும் அங்கே நட நம்பி நீயே"

மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு மிகுந்த இருள்வேளையில் மஞ்சள் ஆடையால் முக்காடிட்டுக் கொண்டு என்வீதி வழியே நீயும் அவளுமாகப் போகும்போது பார்த்துக் கொண்டிருந்தேன். அன்றியும் கண்ணில் தென்பட்ட

வேறொருத்தியைக் கண்ணால் பார்த்துக் கையால் சைகை செய்ததையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தேன். அவளை விட்டு என்னிடத்திற்கு எதற்காக வந்தாய். இனி நீ அவளிடமே செல்வாயாக என்று ஆயர்பாடியில் பெண்ணொருத்தி கண்ணனின் வரவை மறுத்துப் பேசுகிறாள். கண்ணனோ வேறு ஒரு பெண்ணை நாடிச் சென்று விட்டான். கண்ணன் மீது கொண்ட ஊடல் காரணமாக இத்தலைவி வாயில் மறுக்கிறாள்.

*முடிவுரை*

அகமரபுக் கொள்கையை உள்வாங்கிக் கொண்டு குலசேகராழ்வார் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். இம்மரபை ஆழ்வார்கள் பின்பற்றிப் பாடியதற்கு அடிப்படை இறைவனை வெகுவிரைவில் சென்றடைவது மட்டுமல்ல. இம்மெய்ப்பொருளில் ஒன்றி கலந்துவிட வேண்டும் என்ற பேராசையே. அதாவது தலைவனும் தலைவியும் உடலாலும் உள்ளத்தாலும் இணைவதையே அகமரபுகள் அடித்தளமாகக் கொண்டிருப்பதால் அம்மரபையே ஆழ்வார்கள் பின்பற்றித் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு இறைஇணைவுக் கோட்பாட்டில் இணைந்திருக்கின்றனர். இந்த இறைஇணைவையே குலசேகர ஆழ்வாரும் விரும்பியிருக்கிறார்.

# பைந்தமிழ் காத்த பாண்டித்துரைத்தேவர்

புலவர் முத்துவெங்கடேசன்

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்கு அளித்தேனே!"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை வரிகளுக்கு ஓர் உதாரணம் வள்ளல் பாண்டித்துரைத்தேவர்.

'சேது சமஸ்தானம்' என அழைக்கப்பட்ட ராமநாதபுரம் மாமன்னராக விளங்கிய பாண்டித்துரைத்தேவர், வள்ளல் பொன்னுசாமி – பர்வதவர்த்தினி நாச்சியார் தம்பதிக்கு 1867–ம் ஆண்டு மார்ச் 21ம் தேதி ராமநாதபுரம், ராஜவீதி 'கவுரி விலாசம்' என்ற இல்லத்தில் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் உக்கிரபாண்டியன். நாடறிந்த பெயரே பாண்டித்துரைத்தேவர்.

பொன்னுசாமி தேவர் இறந்த போது பாலகராக இருந்த பாண்டித்துரைத் தேவரை வளர்க்கும் பொறுப்பை ஏஜண்ட் சேஷாத்திரி அய்யங்கார் ஏற்றார்.

அழகர் ராஜூ எனும் புலவர் இளம் பருவம் முதல் பாண்டித்துரைத் தேவருக்குத் தமிழ் அறிவை ஊட்டி வந்தார். வக்கீல் வெங்கடேசுவர சாஸ்திரி ஆங்கில ஆசிரியராய் இருந்தார். பாண்டித்துரைத்தேவர் தமிழ், ஆங்கில மொழிகளில் புலமை பெற்றார்.

சிவ பக்தராகத் திகழ்ந்த பாண்டித்துரைத் தேவர் தந்தையின் அரண்மனையை அடுத்து மாளிகை ஒன்றைக் கட்டினார். சிவபெருமான் மீதான பக்தி காரணமாக அம்மாளிகைக்குச் 'சோமசுந்தர விலாசம்' என்று பெயரிட்டார்.

1901–ம் ஆண்டு சொற்பொழிவாற்றுவதற்காக வள்ளல் பாண்டித்துரைத்தேவர் மதுரை வருகை தந்தார். அப்போது 'திருக்குறள் பரிமேலழகர் உரை' நூலை, விழா ஏற்பாடு செய்த அமைப்பாளரிடம் கேட்டார் தேவர். எங்கு தேடியும் அந்நூல் கிடைக்காதது கண்டும்,

பாண்டிய மன்னர்கள் முச்சங்கம் கண்டு முத்தமிழ் வளர்த்த மதுரையில், திருக்குறள் பரிமேலழகர் உரை கிடைக்காதது கண்டும், தமிழ்ப் பற்றுள்ள தேவரின் மனம் வருந்தியது.

தேவர் உடனடியாக, தமிழ் வளர்த்த மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் வெளியிட விரும்பினார். தமிழ்ச் சங்கம் சார்பில் 'செந்தமிழ் கலாசாலை' என்னும் தரமான தமிழ்க் கல்லூரியும் அமைத்தார் தேவர்.

பாண்டித்துரைத் தேவர் தலைமையில் 1901–ம் ஆண்டு மே 24ம் தேதி மதுரை மாநகரில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவ, பெரும்புலவர்களின் ஆலோசனைக் கூட்டம் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் கூட்டப்பட்டது.

நற்றமிழ் வளர்த்த மதுரையில் பாண்டித்துரைத்தேவர், தலைவராக வீற்றிருக்க 1901–ம் ஆண்டு செப்டம்பர் 14–ம் தேதி நான்காம் தமிழ்ச்சங்கம் மலர்ந்து, தமிழ் மணம் வீசியது.

அந்நாளில்தான் பழந்தமிழ்க் கருவூலமாக, பாண்டியன் நூலகமும் உருவானது. 'தமிழ் ஆய்வு மையம்' அமைத்த பாண்டித்துரைத்தேவர், மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் சார்பில், ஆய்வு நுணுக்கமும், ஆழமான புலமையும் மிக்க பெரும் புலவர்களின் கட்டுரைப் பெட்டகமாக 1903–ல் 'செந்தமிழ்' என்னும் நற்றமிழ் மாத இதழும் மலரச் செய்தார். அந்த 'செந்தமிழ்' ஏடு நூற்றாண்டு விழா கண்ட ஏடு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சமயத்தில் பாண்டித்துரைத்தேவர் வெளியிட்ட ஓர் அறிக்கை மூலம், பாரதியாரின் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' பாட்டு பிறந்த கதையைப் பாரதிதாசனின் 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' நூல் வாயிலாக அறியலாம்.

'மதுரைத் தமிழ்ச் சங்கத்தை முன்னின்று நடத்திக் கொண்டு இருந்த பாண்டித்துரைத் தேவர் செய்தி ஏடுகளில் அறிக்கை வெளியிட்டு இருந்தார். அதன் கருத்து பின் வருமாறு:

தமிழ்நாட்டைப் பற்றி சுருக்கமாக எல்லாரும் பாடக்கூடிய மெட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து எழுதி அனுப்புக. நல்லதற்குப் பரிசு தருகிறோம் என்பது.

அந்தப் போட்டியில் கலந்து கொள்ளும்படி நானும் வாத்தியார் சுப்பிரமணியன் முதலியவர்களும் பாரதியாரைக் கேட்டோம்.

அவர் முதலில் மறுத்தார். எங்களுக்காகவாவது எழுதுக என்றோம்.

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்று தொடங்கி பாட்டொன்று எழுதினார் என்று குறிப்பிடுகிறார் பாரதிதாசன்.

சேது சமஸ்தானப் பெரும் புலவர்களாக விளங்கிய தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர், ரா.ராகவையங்கார், மு.ராகவையங்கார், அரசன் சண்முகனார், ராமசாமிப்புலவர், சபாபதி நாவலர், சிங்காரவேலு முதலியார், நாராயண அய்யங்கார், சுப்பிரமணியக் கவிராயர், சிவஞானம் பிள்ளை, சிவகாமி ஆண்டார், யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர், புலவர் அப்துல்காதிர் ராவுத்தர், எட்டயபுரம் சாமி அய்யங்கார், பரிதிமாற்கலைஞர், அரங்கசாமி அய்யங்கார், சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோரின் தரமான படைப்புகள் வெளிவர, மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' ஏடே உதவியது.

உலக மொழிகளிலேயே தமிழ் மொழி, செம்மொழி மட்டுமல்ல, உயர்தனிச் செம்மொழி என்று முதன் முதலாக ஆதாரத்துடன் ஆய்வு செய்து வெளியிட்டவர், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவு பெற்ற பரிதிமாற்கலைஞர் ஆவார்.

அழுத்தமான தமிழ்ப் பற்றின் காரணமாக 'சூரிய நாராயண சாஸ்திரி' என்ற தன் வடமொழிப் பெயரை 'பரிதிமாற்கலைஞர்' என்று பைந்தமிழில் மாற்றிக் கொண்டவர். மேலும் முதன் முதலாக 'தமிழ் மொழி வரலாறு' படைத்த சிறப்பும் உடைய பெரும்புலவரே பரிதிமாற்கலைஞர்.

மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்தே தமிழ்ப்பாடத்தை அகற்ற, வெள்ளை அரசு திட்டமிட்டபோது, அதைத் தடுத்து நிறுத்திய பெருமை, பாண்டித்துரைத் தேவர் அமைத்த மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தையே சாரும்! மதுரைத் தமிழ்ச்சங்கம், மூலம் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ், சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து இருக்க உரிய தீர்மானம் நிறைவேற்றப் பாடுபட்டவர் பரிதிமாற்கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

'தமிழ்ச் செம்மொழி' என்று அன்றே மதுரைத் தமிழ்ச் சங்கம் மூலம் ஆய்வு செய்து பரிதிமாற்கலைஞர் வெளியிட ஆதாரமாக, ஆதரவாக விளங்கிய பாண்டித்துரைத் தேவரும், பாஸ்கரசேதுபதியும் நன்றியுடன் போற்றத்தக்கவர்கள்.

ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து சுதேசி கப்பல் ஓட்டிய வ.உ.சியின் சுதேசி கப்பல் நிறுவனத்துக்கு நிதி உதவி வழங்கிய பாண்டித்துரைத் தேவர் பின்னர் அந்த நிறுவனத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

சிவஞானபுரம் முருகன் காவடிச் சிந்து, சிவஞான சுவாமிகள் பேரில் இரட்டை மணிமாலை, இராஜஇராஜேஸ்வரி பதிகம், தனிப்பாடல்கள் உள்ளிட்டவற்றை இயற்றியுள்ளார் பாண்டித்துரைத்தேவர்.

தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை. செத்தாலும் கூட செந்தமிழாய் பூப்பார்கள். அப்பூக்களுள் ஒருவர் பாண்டித்துரைத்தேவர்.




சங்க இலக்கியப் பயிலரங்கு - தொடக்க விழா

## சங்க இலக்கியத் துறைகள் பயிலரங்கு

"நான்காம் தமிழ்ச்சங்கம்" எனச் சிறப்பிக்கப்பெறும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தினைச் சார்ந்த செந்தமிழ்க் கல்லூரி உயராய்வு மையம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைந்து, தேசிய அளவிலான "சங்க இலக்கியத் துறைகள்" பற்றிய பயிலரங்கினைப் பத்து நாட்கள் (22.12.2008 முதல் 31.12.2008 வரை) நடத்தியது. இப்பயிலரங்கில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சார்ந்த 60 மாணவ–மாணவியர் பங்கேற்பாளர்களாகக் கலந்து கொண்டனர். அகத்திணை மற்றும் புறத்திணை சார்ந்த 36 சங்க இலக்கியத் துறைகளைக் குறித்துப் பேராசிரியப் பெருமக்கள் உரையாற்றினர்; மாணவ–மாணவியர் எழுப்பிய வினாக்களுக்குத் தக்க விடைகளையும் கூறித் தெளிவுபடுத்தினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் தலைவர் பேராசிரியர் க.இராமசாமி தொடக்க உரை ஆற்றினார். செந்தமிழ்க்கல்லூரிச் செயலாளர் திரு. இரா.குருசாமி தலைமை தாங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரா.மோகன் பயிலரங்கம் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் கதிர்.மகாதேவன், மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் பேராசிரியர் செ.பாண்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி சிறப்புரை ஆற்றினார்.

மதுரை கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.நன்மாறன் இப்பயிலரங்கில் ஒருநாள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

36 அமர்வுகள் நடைபெற்ற இப்பயிலரங்கம் பற்றி தங்கள் மனப்பதிவுகளையும் பயிலரங்கம் தங்களுக்குள் ஏற்படுத்திய தாக்கங்களையும் மாணவ–மாணவியர் மதிப்பீட்டில் நன்கு வெளிப்படுத்தினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:

* "நாங்கள் கேள்விப்பட்டு மட்டுமே இருந்த பல தமிழறிஞர்களை

நேரில் சந்திக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது".

* "ஆய்வின் பல களங்களை உணர்ந்தோம்"

* "புதிய உலகிற்குள் அடி எடுத்து வைத்த உணர்வு என்னுள் ஏற்படுகிறது. எதையும் மேம்போக்காகக் கற்பதை விடுத்து ஆழமாகவும், அகலமாகவும் சிந்திக்க வேண்டும் என்பதை இப்பயிலரங்கு எனக்குக் கற்றுக் கொடுத்தது".

* "இந்தப் பயிலரங்கு மூலம் சங்க இலக்கியம் தொடர்பான பல ஆய்வு நெறிகளைக் கற்றுக் கொண்டோம்".

* "என் ஆய்வுப் பார்வையானது ஒருவழிப் பாதையாகவே இருந்தது. ஆனால் இப்பயிலரங்கின் மூலமாக என் ஆய்வுப் பார்வையானது விசாலமான பார்வையாக மாறியுள்ளது"

* "பயிலரங்கில் கலந்து கொண்ட பிறகு நிறையக் கட்டுரைகள் எழுத வேண்டும், புத்தகம் வெளியிட வேண்டும் என்று எண்ணியுள்ளேன். இம்மாற்றம் எனக்குள் ஒரு மாபெரும் புரட்சியாக மாறியுள்ளது. இதனை என்னை உயிர்ப்பித்த செய்தி என்று குறிப்பிடலாம்".

* "மொத்தமாகக் கூறப் போனால் சங்க இலக்கியங்களைப் படிப்பதற்கு என்னைத் தூண்டும் வகையில் இப்பயிலரங்கம் அமைந்தது".

* "சங்க இலக்கியங்களில் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் இப்பயிலரங்கு ஏற்படுத்தியது. சான்றோர் பலரின் கருத்துக்கள் வாயிலாகப் பல்வேறு புதிய தலைப்புகளைக் குறித்து வைத்துக்கொண்டேன்".

* "என் உயிர் பிரிவதற்குள் நான் சங்க இலக்கியம் முழுவதும் கற்க வேண்டும் இல்லையென்றால், என் பிறவி இத்துடன் முடிந்து விடாமல் சங்க இலக்கியம் கற்பதற்காகவே நான் மீண்டும் பிறப்பெடுக்க வேண்டும் என்று தமிழன்னையை வேண்டுகிறேன்".

இப்பயிலரங்கின் சிறப்பு நிகழ்வுகள்:

1. கல்வெட்டுச் சிறப்பு வாய்ந்த இடங்களுக்குப் பங்கேற்பாளர்களை அழைத்துச் சென்றமை; தமிழ்நாடு தொல்லியல் துறையைச் சார்ந்த முனைவர். வெ.வேதாசலம் அவர்களை அழைத்து வந்து உரிய விளக்கங்களைத் தரச் செய்தமை.
2. மூத்த பேராசிரியர் தமிழண்ணல் நடத்திய "கேட்டலும் கிளத்தலும்" நிகழ்ச்சி: இதில் மாணவ—மாணவியர் சங்க இலக்கியம் குறித்துக் கேட்ட பல்வேறு வினாக்களுக்கு மனங்கொள்ளும் வகையில் விடை கூறச் செய்தமை.
3. பேராசிரியர் இரா.மோகன் நடத்திய சங்க இலக்கியம் பற்றிய "வினாடி—வினா", சேரன், சோழன், பாண்டியன் என மூன்று அணிகளாகப் பிரிந்து பங்கேற்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர். சங்க இலக்கியக் கல்வி மற்றும் புரிதல், பேச்சாற்றல், நடிப்புத்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்த இவ்வினாடி வினா நிகழ்ச்சி, அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டது.

பயிலரங்கின் நிறைவு விழா 31.12.2008 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது. செந்தமிழ்க்கல்லூரிச் செயலர் திரு. இரா.குருசாமி, மதுரைத் தமிழ்ச் சங்கச்செயலர் திரு இரா.அழகுமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பங்கேற்பாளர்கள் பயிலரங்கம் பற்றிய மதிப்பீடுகளை வழங்கினர். சாகித்திய அகாதெமி தமிழ் மொழிக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியன் நிறைவுரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சித் துறை முன்னை இயக்குநர் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் சிறப்புரை ஆற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் நிர்மலா மோகன் வரவேற்புரை ஆற்றினார். செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் க.சின்னப்பா நன்றியுரை ஆற்றினார்.

பயிலரங்கில் மூத்த பேராசிரியர் தமிழண்ணல், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரா.மோகன் ஆகிய இருவரும் மதியுரைஞர்களாகப் பணியாற்றினர். பயிலரங்க ஏற்பாடுகளைச் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியை நிர்மலா மோகன் திறம்படச் செய்திருந்தார். அவரது விருந்தோம்பல் பண்பும், பயிலரங்க அமர்வுகளை அவர் நடத்திச் சென்ற பாங்கும் பங்கேற்பாளர்கள் மற்றும் பேராசிரியப் பெருமக்கள் அனைவரது உள்ளங்களையும் பெரிதும் ஈர்த்தன.

## வாசகர் வாசகம்

அன்புடையீர்,

வணக்கம். முனைவர் மா.இராமச்சந்திரன் அவர்களின் 'பாரதிதாசன் பாடல்களில் மானுடநேயம்' கட்டுரைத்தொடர் புதியதரவுகளை உள்ளடக்கிய சீரிய ஆராய்ச்சியாகும்; செந்தமிழும் உரம் சேர்ப்பதும் ஆகும். வணிகர் குடும்பத்தைச் சேர்ந்த பாரதிதாசனுக்கு வாணிகம் பற்றிய பட்டறிவு நிரம்ப உண்டு. ஏமாற்றிச் சுரண்டி மிகு ஊதியந்தேடும் வணிக உத்தியை அவர் உணர்வார். மானுட நேயமற்ற அவர்களின் செயலை,

'அரிசி என்றால் கல்லும் புழுவும் அளந்து கொடுப்பார்'

"பெருங்காயம் ஒருபெட்டி வைத்திருப்பான்
பிள்ளை பெற்றவருக்கும் இல்லையே என்பான்'

எனச் சாடுவார். அரசே வாணிகம் செய்தால் மானுடம் மலரும் எனத் தீர்வும் உரைத்தார். பயன்பாட்டு நோக்கில் அமைந்த அக்கட்டுரையின் மதிப்பு உன்னதமானது. வாழ்க கட்டுரையாளர் இராமச்சந்திரன்.

நன்றி!

அன்புடன்,
முனைவர் இ.கி. இராமசாமி
3/191, கவிமணி தெரு,
நாராயணபுரம், மதுரை - 14

## வாசகர் வாசகம்

நெஞ்சிற்கினிய பெருந்தகை 'செந்தமிழ்' ஆசிரியர் ஐயா இரா.அழகுமலை அவர்களுக்கு,

வணக்கம், தங்கள் சீரிய நலம் ஓங்குக. பெருமைமிகு தலைவர் முகவை மன்னருக்கு என் நல்வணக்கம் கூறுங்கள். மற்றும் பொறுப்பாளர்களுக்கும் என் வணக்கம் உரியதாகுக.

'செந்தமிழ்' தொடர்ந்து வந்து செம்மையான தமிழ் தமிழ் விருந்து படைக்கிறது. போற்றிப் பாராட்டுகிறேன்.

அக்டோபர் இதழில் இந்த எளியவனின் கவிதையை முதல் அட்டையின் பின்புறம் சிறப்புடன் வெளியிட்டு ஊக்குவித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றி!

இதழ் நெடுக இடம் பெற்ற கட்டுரைக் கனிகள் இனிப்பூட்டுகின்றன.

உவமைக் கவிஞரின் 'பாண்டித்துரைத் தேவர்' கவிஞரைத் தேடிப் பிடித்து வெளியிட்டமையைப் போற்றுகின்றேன்.

வாழிய தாங்கள்.

ஓங்குக 'செந்தமிழ்'.

தங்கள்

கா.வேழவேந்தன் பி.ஏ., பி.எல்.,


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508/56 January 2009


## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை– 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,


பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : நலம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1